பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 07 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**2.** தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளின் சமூகநீதி விடுதிகளில் மாணவர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் கூறியுள்ளார்.

**3.** தேர்தல் வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**4.** மேகதாது அணை விவகாரம் தொடர்பாக தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

**5.** நீலகிரி, கோவை மற்றும் தேனி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இளையோருக்கான நிர்வாக பயிற்சித் திட்டம் தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், தலைமைப் பண்பு என்பது அதிகாரத்தால் வருவதல்ல என்றும், சேவையின் மூலமே அது மதிப்பிடப்படுவதாகவும் கூறினார்.

இளைஞர்கள் அறநெறியுடனும், அர்ப்பணிப்புடனும் தேசத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மாநில மற்றும் மொழி எல்லைகளைக் கடந்து அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள பல்வேறு வகையான கலாச்சார பாரம்பரியம் நாட்டின் மிகப்பெரிய பலம் என்று அவர் குறிப்பிட்டார்.

அரசியல் அமைப்பு விழுமியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிமைகளுடன், கடமைகளை நிறைவேற்றும்போது ஜனநாயகம் தழைத்தோங்கும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<>>>>

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளின் சமூகநீதி விடுதிகளில் மாணவர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் கூறியுள்ளார்.

நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளை நேற்று அவர் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte - Sampath Kumar — 46 Sec)**

<<<>>>>

தமிழகத்தில் இலவச வேட்டி-சேலை திட்டத்திற்காக நூல் கொள்முதல் செய்ய முதற்கட்டமாக 300 கோடி ரூபாய் ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் திண்டலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நூற்கொள்முதலுக்கான ஒப்பந்தப் புள்ளிகளை வரும் 23ஆம் தேதி வரை சமர்ப்பிக்கலாம் என்றார்.

கடந்த முறை இலவச வேட்டி-சேலை வழங்கியதில் புகார் எழுந்தது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் கைத்தறித் துறையில் முறைகேடுகள் ஏதேனும் நடந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு தேவை ஏற்பட்டால் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று திரு. விஜய் பாலாஜி கூறினார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இலவச மின்சாரம் தொடர்பான வாக்குறுதியை தேர்தல் அறிக்கையில் த.வெ.க. அளித்திருந்ததாகவும், ஆனால் அதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் மின் கணக்கீடு நடத்தப்படும் என்ற வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்வெட்டு அதிகரித்துள்ள நிலையில் அதுகுறித்து மின்துறை அமைச்சர் அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

முந்தைய ஆட்சியில் குற்றவாளிகள் துணிச்சலாக சுற்றித் திரிந்ததைப் போலவே தற்போதைய ஆட்சியின் நிலையும் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனவே சட்டம்-ஒழுங்கை சீர்செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

கூட்டுறவு வார விழா நாடு முழுவதும் வரும் 6ஆம் தேதி வரை கொண்டாடப்படும் நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் மாநில கூட்டுறவுத் துறையும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் இணைந்து விருது வழங்கும் விழாவுக்கு இன்று ஏற்பாடு செய்துள்ளன.

இதனிடையே திருவள்ளூரில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயனடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

ஈரோட்டில் நேற்றிரவு செய்தியாளர்களிடம் பேசிய அவர், கர்நாடக அரசு இது தொடர்பான உண்மைக்கு மாறான தகவல்களை கூறி வருவதாகத் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் அமைப்பது தொடர்பான கோரிக்கை ஏற்புடையதல்ல என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கூறினார்.

<<<<>>>>

மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை தமிழக காங்கிரஸ் எதிர்க்கும் என்று அக்கட்சியின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவரும், மாநில அமைச்சருமான திரு. ராஜேஷ் குமார் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் தமிழக காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தின் உரிமைகளில் சமரசம் செய்துகொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என்று திரு. ராஜேஷ் குமார் கூறினார்.

<<<<>>>>

நீலகிரி, கோவை மற்றும் தேனி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய பிற மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் ஓரிரு

இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சிரியாவின் டமாஸ்கசில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் **9** பேர் உயிரிழந்தனர். **20**-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

-------------

ஏடன் வளைகுடா பகுதியில் வெளிநாட்டு வணிகக் கப்பலில் நடைபெற்ற கடல் கொள்ளை முயற்சியை, அப்பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படை கப்பல் ஐஎன்எஸ் திரிகண்ட் முறியடித்தது.

-------------

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று பங்கேற்கிறார்.

-------------

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் குறித்த தேசிய பயிலரங்கு, மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

-------------

விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாநில அமைச்சர் செல்வி கீர்த்தனா ஆய்வு மேற்கொண்டார்.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் புதுமல்லவாடி ஊராட்சியில் வளர்ச்சியடைந்த இந்திாயவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் கூடப்பட்டு அரசு தோட்டக்கலைப் பண்ணையில் மாவட்ட ஆட்சியர் திரு. ரவிகுமார் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

நாமக்கல் மாவட்டம் நவணி ஊராட்சியில், வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆட்சியர் திரு. மதுபாலன் பங்கேற்று, திட்டம் குறித்து உரையாற்றினார்.

-------------

தருமபுரி மாவட்டம், கே.வேட்ரப்பட்டியில் தேசிய கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள செம்மறி ஆடுகள் வளர்க்கும் நவீன தொழில்நுட்ப பண்ணையை மாவட்ட ஆட்சியர் திரு. சரவணன் ஆய்வு செய்தார்.

-------------

சென்னை தண்டையார்பேட்டை மண்டலத்தில் **226** கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வரும் பாலப் பணிகளை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**இந்தியா - இலங்கை அணிகள் பங்கேற்கும் 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளைக் கொண்ட தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.**

**முதலாவது போட்டி அடுத்த மாதம் 15ஆம் தேதி Galle-விலும், இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 23ஆம் தேதி கொழும்பிலும் தொடங்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.**

**-----------**

**கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் தன்யா ஹேமந்த் மற்றும் ஆகர்ஷி கஷ்யப் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தோல்வியடைந்தனர்.**

**<<<<The End>>>>**